பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 02 2026 Wednesday 12 40 செய்தி ஆசிரியர்
நண்பகல் ஆர். சிதம்பரநாதன்

ஆகாஷவாணி
**(Tune)**

செய்திகள் - வாசிப்பவர் — வடிவழகி கபிலன்

தலைப்புச் செய்திகள்

1. அரசு முறை பயணமாக இஸ்ரேல் புறப்பட்டுச் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் திரு **Benjamin Netanyah**-உடன் இன்று இருநாட்டு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.
2. மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவை தேர்தல் அறிவிக்கப்படவுள்ள நிலையில் மத்திய ஆயுத காவல்படையினருக்கான வாகனங்களில் இருப்பிடம் காட்டும் கருவியை பொருத்துவதற்கு தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.
3. உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அணு சக்தியை ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி வலியுறுத்தியுள்ளார்.
4. உலகிலேயே பொருளாதாரத்தில் வலுவான நாடாக அமெரிக்கா உருவெடுத்துள்ளதாக அந்நாட்டு அதிபர் **Donald Trump** தெரிவித்துள்ளார்.
5. **Pro** ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

... இனி விரிவான செய்திகள்...

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இஸ்ரேல் பிரதமர் திரு. **Benjamin Netanyah-** உடன் இன்று இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

இஸ்ரேல் பயணம் தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது இரண்டு நாள் பயணத்தின் மூலம் இந்தியா-இஸ்ரேல் இடைடேயாயான உறவு மேம்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் திரு. **Benjamin Netanyah-**உடன் பேச்சுவார்த்தை நடத்துவற்கு ஆவலுடன் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அறிவியல் தொழில்நுட்பம், விவசாயம், புத்தாக்கத் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கிடையே ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து முக்கியமாக விவாதிக்கப்படும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது இஸ்ரேல் பயணத்தின்போது அந்நாட்டு அதிபர் திரு. **Isaac Herzog-**ஐ சந்தித்து பேசவுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளதாக இஸ்ரேலுக்கான இந்திய தூதர் திரு. ஜே.பி. சிங் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் இந்திய பிரதமர் ஒருவர் உரையாற்ற உள்ளது முதல்முறையாகும் என்று அவர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<<

இந்தியா- இஸ்ரேல் இடையே பாதுகாப்புத்துறையில் கூடுதலாக இணைந்து செயலாற்றுவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இஸ்ரேல் பயணம் தொடர்பாக சமூக வலைதளப் பதிவியில் செய்தி வெளியிட்டுள்ள அவர், இரு நாடுகளின் நல்லுறவும் வலுப்படுவதற்கு ஏற்ற வகையில் விரிவான ஆலோசனை நடத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<<

மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவை தேர்தல் அறிவிக்கப்படவுள்ள நிலையில் மத்திய ஆயுத காவல்படையினருக்கான வாகனங்களில் இருப்பிடம் காட்டும் கருவியை பொருத்துவதற்கு தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

முதல் கட்டமாக 240 குழுக்கள் மார்ச் ஒன்றாம் தேதி மேற்கு வங்கம் சென்றடையும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அம்மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் துணை ராணுவப் படையினர் செல்வதற்கு வசதியாக இருப்பிடம் காட்டும் வசதியுடன் கூடிய வாகனங்கள் இயக்கப்படும் என்று அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டமாக மார்ச் 10 ஆம் தேதி 240 துணை ராணுவப்படை குழுவினர் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்தகுழுவில் மத்திய துணை ராணுவப்படை, எல்லை ராணுவ படை, மத்திய தொழிலக பாதுகாப்பு படை, இந்தோ- திபெத் எல்லை பாதுகாப்பு படை மற்றும் சிறப்புக்காவல் படைகளை சேர்ந்த வீரர்கள் பணியில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

ராணுவம் மற்றும் அக்னிவீராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் பணியாற்றுவதற்கு வசதியாக ராணுவமும் இந்திய ரயில்வேயும் இணைந்து புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது.

இது தொடர்பாக இந்திய ராணுவத்தின் பொது தகவல் கூடுதல் தலைமை இயக்குனர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பாதுகாப்பு பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக இந்த கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு ஏற்றவாறு இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<<

இந்திய ராணுவம் கடற்படை மற்றும் எல்லை பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட வாகன யாத்திரை புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவு சின்னத்தில் நிறைவு பெற்றது.

கடந்த முன்றாம் தேதி தொடங்கிய பாரத் ரன் பூமி தர்ஷன் என்ற யாத்திரை 3 ஆயிரத்து 400 கிலோ மீட்டர்தொலைவுக்கு நடைபெறறது. 22 நாட்கள் நடைபெற்ற இந்த பயணம் குஜராத், ராஜஸ்தான் மாநிலங்கள் வழியாக புதுதில்லியில் நிறைவு பெற்றது.

போரின் போது வீரமரணம் அடைந்தவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த பயணம் இருந்ததாக எமது செய்தியார் கூறுகிறார்.

>>>>>><<<<<<<

உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அணு சக்தியை ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச அணு ஆயுத குறைப்பு மாநாட்டில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், ராணுவப் பணிகளுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாடு, பொறுப்பான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு துறைக்கென்று சிறப்பு நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

வளரும் நாடுகளின் நலனை கருத்தில் கொண்டு வளர்ச்சி பணிகளுக்காக மட்டுமே செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

>>>>>><<<<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் ஆதர்ஷ் கிராம் யோஜனா திட்டத்தை செயல்படுத்த 26 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த கிராமங்களில் 40 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட்- 45 Sec)

>>>>>><<<<<<<

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்தத்தலைவர் திரு நல்லகண்ணு சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

101 வயதாகும் மூத்த தலைவருக்கு வெண்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 20 நாட்களாக சிறுநீரக செயலிழப்பு மற்றும் நிமோனியா காரணமாக அவர் சிகிச்சை பெற்று வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

>>>>>><<<<<<<

உலகிலேயே பொருளாதாரத்தில் வலுவான நாடாக அமெரிக்கா உருவெடுத்துள்ளதாக அந்நாட்டு அதிபர் Donald Trump தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இன்று உரையாற்றிய அவர், தமது தலைமையில் அமெரிக்கா மீண்டும் வலுவடைந்த நாடாக மாறியுள்ளதாக கூறியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு, எல்லை கட்டுப்பாடு குறித்து உரையாற்றிய அவர், தமது நிர்வாகம் மூலம் அமெரிக்க எல்லை பாதுகாப்பாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்பது மாதங்களில் அமெரிக்காவிற்கு சட்ட விரோதமாக குடியேறுவதை முற்றிலும் தடை செய்துள்ளதாக கூறினார்.

அமெரிக்காவில் கொலை சம்பவங்கள் கடந்த 125 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளதாக அவர் கூறிய அவர், செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களை மேம்படுத்த புதிய திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

புதிய தொழில் நிறுவனங்களுக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய தனியார் மின் நிலையங்கள் அமைக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த ஆண்டு அமெரிக்காவில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளதாக கூறிய திரு. **Donald Trump** அமெரிக்க நாட்டின்

வளர்ச்சிக்கு தேவையான அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

>>>>>><<<<<<<

**Pro** ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

**Hobart-**ல் இப்போட்டி இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு தொடங்குகிறது.

**Hubbali-**யில் நடைபெற்று வரும் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் இறுதி போட்டியின் இரண்டாம் நாளான இன்று கர்நாடக அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஜம்மு காஷ்மீர் அணி முதலாவது இன்னிங்சில் - உணவு இடைவேளை வரைர **4** விக்கெட் இழப்பிற்கு **380** ரன்கள் எடுத்துள்ளது.

ஜெர்மன் ஓபன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் இன்று பிரான்சின் **Christo Popov-**ஐ எதிர்கொள்கிறார்.

**Mulheim** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Tharun Mannepalli-** தைவானின் **Tzu Wei Wang-**ஐ எதிர்கொள்கிறார்.

**>>>>>>End<<<<<<<**